

திருப்பத்தூர் மாவட்டத்தில் கலைஞரின் கனவு இல்லம் திட்டபயனாளிகளுக்கு அமைச்சர் எ.வ.வேலு ஆணைகளை வழங்கினார். உடன் மாவட்ட கழக செயலாளர் க.தேவராஜி எம்எல்ஏ, திருவண்ணாமலை நாடாளுமன்ற உறுப்பினர் சி.என். அண்ணாதுரை, ஆம்பூர் சட்ட மன்ற உறுப்பினர் அ.செ.வில்வநாதன், மாவட்ட ஊராட்சி குழுத்தலைவர் என்.கே.ஆர்.சூரியகுமார், ஒன்றிய குழு தலைவர் சத்யா, மற்றும் கவிதா,உமாகன் ரங்கம் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### திருப்பத்தூர் மாவட்டம் ஜோலார்பேட்டையில்

# கலைஞரின் கனவு இல்லம் திட்ட 868 பயனாளிகளுக்கு பணி ஆணை!

## அமைச்சர் எ.வ.வேலு வழங்கினார்!

திருப்பத்தூர், ஏப். 20-

திருப்பத்தூர் மாவட்டம் ஜோலார்பேட்டை அடுத்த பால்னாங்குப்பத்தில் திருப்பத்தூர் நாட்றம்பள்ளி, கந்திலி, ஜோலார்பேட்டை ஆகிய ஒன்றியங்களுக்கு உட்பட்ட தமிழ்நாடு அரசின் பல்வேறு துறை சார்ந்த கட்டிடங்களை பொது பயன்பாட்டிற்கு திறந்து வைத்து கலைஞரின் கனவு இல்லம் திட்ட868 பயனாளிகளுக்கு பணி ஆணைகளை வழங்கும்விழா திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் சிவசவுந்தர வல்லி தலைமையில் நடந்தது .

மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் உமா மகேஸ்வரி அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

திருவண்ணாமலை நாடாளுமன்ற உறுப்பினர் சி .என். அண்ணாதுரை மாவட்ட கழக செயலாளர் க.தேவராஜ் எம்.எல்.ஏ ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஆம்பூர் சட்டமன்ற உறுப்பினர்அ.செ.வில்வ நாதன், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் என். கே .ஆர். சூரிய குமார் ஜோலார்பேட்டை ஒன்றிய குழு தலைவர் எஸ் .சத்யா சதீஷ் குமார், நாட்றம்பள்ளி ஒன்றிய குழு தலைவர் வெண்மதி முனுசாமி, திருப்பத்தூர் ஒன்றிய குழு தலைவர் விஜயா அருணாச்சலம் மாவட்ட கவுன்சிலர் கவிதா தண்டபாணி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

இதில் பொதுப்பணி மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் எ.வ. வேலு சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு புதிதாக கட்டி முடிக்கப்பட்ட கட்டிடங்களை பயன்பாட்டிற்கு திறந்து வைத்து கலைஞரின் கனவு இல்லம் திட்ட868 பயனாளிகளுக்கு பணி ஆணைகளை வழங்கினார். நிகழ்ச்சியில் நகர செயலாளர் ராஜேந்திரன், மாவட்ட துணை செயலாளர் ஆ.சம்பத்குமார், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் வீ.வடிவேல்,

ஒன்றிய செயலாளர் எஸ்.கே.சதீஷ்குமார், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் தே.பிரபாகரன், கந்திலிஒன்றிய செயலாளர் எஸ் கே .டி அசோக்குமார் நகர செயலாளர் அன்பழகன், நகர மன்ற தலைவர் எம் .காவியா விக்டர் உள்பட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# கடலூர் கிழக்கு மாவட்ட அவைத் தலைவர் து.தங்கராசு மறைவு!

## கழக முன்னணியினர் - நிர்வாகிகள் அஞ்சலி!

கடலூர்,ஏப்.20-

கடலூர் கிழக்கு மாவட்ட அவைத் தலைவரும் முன்னாள் நகர் மன்றத் தலைவரும், முன்னாள் நகரக் கழகச் செயலாளருமான து.தங்கராசு அவர்கள் நேற்று (19.4.2025) காலை 6.30 மணியளவில் இயற்கையெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.



செய்தியறிந்ததும் கழக முன்னணியினர், கழகத் தோழர்கள் திரளாகச் சென்று மறைந்த து.தங்கராசு அவர்களின் உடல் மீது மலர் மாலை வைத்து இறுதி அஞ்சலி செலுத்தினர்.

அன்னாருக்கு அரசு என்ற மனைவியும், ரமேஷ், செல்வகுமார் என்ற மகன்களும், மணிமேகலை, சசிகலா என்ற மகள்களும் உள்ளனர்.

அன்னாரின் இறுதி ஊர்வலம் இன்று (20.4.2025-ஞாயிற்றுக்கிழமை) காலை 10 மணிக்கு கடலூர்,திருப்பாபுலியூர், அண்ணாநகரில் உள்ள அவரது இல்லத்தில் இருந்து புறப்பட்டு அங்குள்ள இடுகாட்டில் இறுதிச் சடங்குகள் நடைபெறுகின்றன.

முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி

ஏப்ரல் 20 2025

கழகம் ஆரம்பிக்கப்பட்ட நாள்முதல் வாளமாபுரம் கிளைக் கழகச் செயலாளராகவும்/ திருத்துறைப்பூண்டி ஒன்றிய கழகப் பொருளாளராகவும் மாவட்டக் கழகப் பிரதிநிதியாகவும் / ஒன்றிய விவசாய அணி அமைப்பாளராகவும் என பல்வேறு பொறுப்புகள் வகித்த

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவரும்/ 1980-ஆம் ஆண்டு இவர் தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

கழகமே தனது உயிர் மூச்சாக வாழ்ந்த கழகத்தின் மூத்த முன்னோடி - வாளமாபுரம்



V.R.M (எ) V.R.முருகேசன்

மண்ணின் மைந்தருக்கு, மாசற்ற மாணிக்கத்திற்கு, எங்கள் இதய தெய்வத்திற்கு உளப்பூர்வமான நமஸ்காரங்கள். என்றும் அவர்கள் வாழ்ந்த வாழ்க்கையை நினைவுகூர்ந்து, அவர்கள் காட்டிய பாதையில் நினைவுகளுடன் வாடும்

மனைவி:
மோகனா முருகேசன்

மகன் - மருமகள்:
Mu.ரெத்தினபாண்டியன் - தமிழ்ச்செல்வி ரெத்தினபாண்டியன்

மகள் - மருமகன்:
S.ரெத்தினகல்யாணி - K.செந்தில் குமார்

பேரக்குழந்தைகள்:
S.R.ராகவேந்திரா, R.ஹர்ஷிதா, R.ஹன்சிகா ஸ்ரீ

குடும்பத்தினர்கள், உறவினர்கள் மற்றும் நண்பர்கள் - வாளமாபுரம், திருத்துறைப்பூண்டி

### மாவட்டப் பொறுப்பாளர் கே.எம்.ராஜு தலைமையில்

# குன்னூரில் நீர்மோர் வழங்கல்!

## அரசு கொறடா கா. இராமச்சந்திரன் வழங்கினார்!

உதகை, ஏப்.20-

குன்னூர் மவுண்ட் ரோடு பகுதியில் குன்னூர் தந்தி மாரியம்மன் முத்து பல்லாக்கு தேர்த்திருவிழாவினை முன்னிட்டு நீலகிரி மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகம் சார்பில் மாவட்டக் கழக பொறுப்பாளர்கே எம் ராஜு தலைமையில் நீர் மோர் வழங்கும் நிகழ்ச்சியை அரசு தலைமை அரசு கொறடா கா.ராமச்சந்திரன் தலைமை பொதுக்குழு உறுப்பினர் க.செல்வம் மற்றும் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் வி.வினோத்குமார் ஆகியோர் ஏற்பாட்டில் துவக்கி வைத்து பொதுமக்களுக்கு நீர்மோர் மற்றும் தர்பூசணி பழங்களை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட அவைத் தலைவர் போஜன்,மாவட்டத் துணை செயலாளர் செல்வி லட்சுமி,ஒன்றிய செயலாளர் . பிரேம்குமார்,பொதுக்குழு உறுப்பினர் காளிதாசன்

வழக்கறிஞர்கள்: எஸ் பாபு,.குயில் அரசன், சிவகுமார், முன்னாள் வர்த்தக அணி துணை அமைப்பாளர் முருககுமார், முன்னாள் விவசாய அணி துணை அமைப்பாளர் பாலன்,

முன்னாள் மாவட்ட சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு உறுப்பினர் CTN ஃபாருக், மீனவர் அணி துணை அமைப்பாளர் ஆட்டோ செல்வம்,முன்னாள் ஒன்றிய துணை செயலாளர் அழகு சேகர், ஒன்றிய பிரதிநிதி செபாஸ்டியன் அமுல்ராஜ்,நகர இலக்கிய அணி துணை அமைப்பாளர் மகாலிங்கம், டேன்ட்டி விஜயகுமார், தீனதயாளன், கேபிள் சாகய்.

இளைஞர் அணி :ரகுநாதன், ஸ்ரீதர், சாஜு, நந்தகுமார்,ஆதிதிராவிடர் நலக் குழு உறுப்பினர் பாபு,மகளிர் தொண்டரணி துணை அமைபாளர் மதி. யசோதா, சிஜு, மணிகண்டன், அருள், தினேஷ்,குமார்,விக்னேஷ், உட்பட மாவட்ட, நகர, ஒன்றிய பேரூர்,கிளை கழக நிர்வாகிகள், பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

### முதல்வர் பிறந்தநாள் விழா - வேலூர் மாநகரம்

# ஆர்.என்.பாளையத்தில் தெருமுனைப் பிரச்சார பொதுக்கூட்டம்!

## இன்று நடைபெறுகிறது!

வேலூர், ஏப்.20-

வேலூர் மாநகரம் கஸ்பாபகுதி 42வதுவட்ட திமுக சார்பில் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின்அவர்களின் 72வதுபிறந்த நாள் தெருமுனை பிரச்சார பொதுக்கூட்டம் இன்று (ஞாயிற்றுக்கிழமை) மாலை 6மணிக்குஆர். என். பாளையம் கலைஞர் திடலில் நடக்கிறது.

கூட்டத்திற்கு பகுதி கழக செயலாளர் தி.அ. முன்வர் பாஷா தலைமை தாங்குகிறார். ஜெ.நஜீர், வே.கதிரவன் அனைவரையும் வரவேற்று பேசுகிறார்கள். பொதுக்குழு உறுப்பினர் மா.ப.அன்புநிதி, தி.அ.முகமது சாதிக், ஜெ.அயூப்கான், மாமன்ற உறுப்பினர்கள் ஜெ.கைருன்னிஷா,ரேகா அன்பு நிதி, தபசும்பர்வீன் ஆபிதாகானம், கோகிலா சக்தி, மாநகர சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு அமைப்பாளர் ஏ.காலப்பாஎன்ற அப்துல் மஜீத், மாநகர ஆதிதிராவிடர் நலக் குழு அமைப்பாளர் எம்.அந்தோணி, ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்கள்.

கூட்டத்தில் மாவட்டக் கழக செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ., மாவட்ட அவைத் தலைவர்தி.அ.முகமதுசகி, மாநகர செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ, நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர் ஆனந்த், மாவட்டப் பொருளாளர் நரசிம்மன், மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார், துணை மேயர் எம்.சுனில் குமார், மாநில கழக கொள்கை பரப்பு துணை செயலாளர் டாக்டர் வி. எஸ்.விஜய், மாநகர துணை செயலாளர்கள் முன்னா ஷெரீப், தேவ நேசன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றுகிறார்கள்.

முடிவில் வட்ட பிரதிநிதி அப்துல் ரகுமான் நன்றி கூறுகிறார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சி.வி.எம். அண்ணாமலை

ஏப்ரல் 20 (1997)



சுயமரியாதை இயக்கக் காலத்திலிருந்து திராவிட இயக்கத்தின் செயல்வீரராகத் திகழ்ந்தவர்.

அன்றைய செங்கற்பட்டு மாவட்டக் கழகச் செயலாளராகப் பணியாற்றியவர். கலைஞர் அமைச்சரவையில் சமூக நலத்துறை அமைச்சராகப் பணியாற்றியவர்.

1938ஆம் ஆண்டு இந்தி எதிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டு ஆறு மாத காலம் பெல்லாரி சிறையில் அடைக்கப்பட்டார்.

பெரியார், அண்ணா அறிவித்த அறப்போராட்டங்களிலும் – தலைவர் கலைஞர் அறிவித்த போராட்டங்களிலும் பங்கேற்று சிறைப் பறவையாக விளங்கியவர்.

இயக்கக் கொள்கைகளை எடுத்துரைத்திட அண்ணா, கலைஞர் ஆகியோர் நடத்திய நாடகங்களில் பங்கேற்று நடித்தவர்.

1986ஆம் ஆண்டு நடைபெற்ற கழக முப்பெரும் விழாவில், தலைவர் கலைஞர் இவருக்கு அண்ணா விருது வழங்கிச் சிறப்பித்தார்கள்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஜி. சொக்கலிங்கம்

ஏப்ரல் 20 (2000)



தன் இளமைப் பருவத்திலேயே கழகத்தில் இணைந்து, பேரறிஞர் அண்ணா அவர்களிடத்திலே தொடர்பு கொள்ள, பழகுகிற வாய்ப்பும் பெற்றிருந்து, பின்னர் சட்டமன்ற உறுப்பினராகி, மக்கள் பணியாற்றுவதிலும், இந்த இயக்கத்தை வளர்ப்பதிலேயும், கொள்கையைக் காப்பதிலேயும் முன்நின்றவர்.

இவர் காஞ்சிபுரம் மாவட்டக் கழக துணைச் செயலாளராக பணியாற்றியவர்.

மாம்பாக்கம் ஊராட்சி மன்றத் தலைவராகவும் – 1977, 1980, 1996 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் திருப்போரூர் தொகுதியில் கழகத்தின் சார்பாக போட்டியிட்டு வெற்றி பெற்று பணியாற்றியவர்.

கழகம் அறிவித்த பல்வேறு போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர். குறிப்பாக இலங்கைத் தமிழர் பிரச்சினைக்காக தலைவர் கலைஞர் அவர்களை கைது செய்தபோது, உடன் சிறை சென்று 45 நாட்கள் சிறைவாசம் அனுபவித்தவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.